# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## பங்குனி 26, விசு - திருவள்ளுவர் ஆண்டு - 2033
## 2002 ஏப்ரல் 9, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*" ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப் புடைத்து."*

*ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.*

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி விடுதலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சென்னை மாநகர காவல் துறை ஆணையரிடமிருந்து 8-4-2002ஆம் நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"We have the honour to inform that Thiru Parithi Ellamvazhuthi, M.L.A., Egmore Constituency who was arrested at 8-45 hours today, 8th April 2002 in P-1, Pulianthoppu Police Station, Crime Number 212/2002 was released on bail at 18-50 hours."

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**THIRU C. GNANASEKARAN:** We have already given an Adjournment Motion.

**திரு. பரிதி இளம்வழுதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இன்று காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். இப்பொழுதுதான் கொடுத்திருக்கிறார்கள். என் ஆய்வில் இருக்கிறது. இப்பொழுது எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை.*

(ஆ) சென்னை மாநகராட்சிமன்ற இடைத்தேர்தலின்போது ஏற்பட்ட பிரச்சினைகள்

**பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை வழக்கமான ஒத்திவைப்புப் பிரச்சினையைப் போன்றது அல்ல. மிக மிகப் பெரிய அளவில் பாதிப்பை உண்டாக்கி இருக்கிற ஒரு பிரச்சினை. சென்னை மாநகரத்திலே 2 வட்டங்களில் நடைபெற்ற இடைத் தேர்தலில் மாற்றுக் கட்சியினர் யாருமே செயல்பட முடியாத அளவில்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேராசிரியர் அவர்களுக்கே விதிமுறைகள் தெரியும். இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் அதற்கு உள்ளே போவது சரியில்லை. இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால், அரசிடமிருந்து அதற்குரிய பதில், விளக்கங்கள், இவையெல்லாம் வரவேண்டும். அவை வந்ததற்குப் பிறகு எடுத்துக்கொள்வதற்கு உரிய வாய்ப்பு இருக்கிறது; எடுத்துக்கொள்ளலாம்.*

**பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எழுப்பப்படவில்லையென்றால் எதிர்க்கட்சிகளே செத்துப்போய் விட்டன என்று பொருளாகும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. நீங்கள் இந்தப் பிரச்சினையை இப்பொழுது எழுப்புவதிலிருந்தே எதிர்க்கட்சிகள் உயிரோடு இருக்கின்றன என்று தெரிகிறது.*

**பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள் உயிரோடு இருந்தால் மட்டும் போதாது. ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்.*